<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.46/2015</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 09.02.2021**

**பெயர் - கோபி**

**த/பெ - எல்லையா**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -11.41am**

**<u>முதல் விசாரணை -</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணபத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 07.02.1973 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் வாசா ஆ 1 ஆகவும், 14.10.1974 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் வாசா ஆ 2 ஆகவும், பட்டா எண் 41ன் அசல் வாசா ஆ 3 ஆகவும், 27.04.2000 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 4 ஆகவும், பட்டா எண் 53ன் அசல் வாசா ஆ 5 ஆகவும், மின்சார வெள்ளை அட்டை வாசா ஆ 6 ஆகவும், 20.10.2014 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 7 ஆகவும், வீட்டுவரி ரசீதுகள் வாசா ஆ 8 ஆகவும், 14.05.2003 தேதியிட்ட பட்டா எண் 53ன் அசல் வாசா ஆ 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை-</u>**

நான் பி.ஏ படித்துள்ளேன். அசல் வழக்கு எண் 46/2015 என் தம்பி லோகு வெங்கடேசன் மீது தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் நான் தரப்பினர் இல்லை. நான் சாட்சியம் அளிக்க என் தம்பி அதிகார கடிதம் கொடுத்தாரா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் கூறினார். எந்த வித அதிகார கடிதமும் கொடுக்காத நிலையில் எதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தம்பிக்கு அதிக விவரம் தெரியாததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அசல் வழக்கு எண் 46/2015ல் பிரதிவாதிகள் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதன் விவரம் எனக்கு தெரியும். அது எதற்காக என்றால் விற்பனை செய்த இடத்தை தங்களுக்கு உரிமை என தாக்கல் செய்துள்ளனர். நான் என் தம்பி இருவரும் கூறி தான் வழக்குரையும் பதில் உரையும் வழக்கறிஞர் தாக்கல் செய்தார். வாசா ஆ 1யை நான் படித்து பார்த்தேன். மேற்படி ஆவணம் ஜெயம்மாள் என்பவர் என் பெரியப்பா கோவிந்தசாமிக்கு எழுதிக்கொடுத்தார். சர்வே எண் 128/15ன் மொத்த விஸ்தீரணம் 38 சென்ட். அதில் 19 சென்ட்டை வெங்கடேசனின் தந்தை 1960ல் கிரையம் பெற்றார். வாசா ஆ 2ன் படி 19 சென்ட்டை ராமநாத ரெட்டியிடம் இருந்து என் பெரியப்பா கோவிந்தசாமி கிரையம் பெற்றார். வாசா ஆ 1ன் விஸ்தீரணம் 16.5 சென்ட். வாசா ஆ 1லேயே மீதம் உள்ள பாகம் வழிப்பாதைகாக எற்படுத்திக்கொள்ள எழுதிஉள்ளனர். வாசா ஆ 1ல் மீதம் உள்ள 2.5 சென்ட்டை ஜெயம்மாள் நிருத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அதற்கும் பணம் பெற்றார். மீதம் உள்ள 2.5சென்டுக்கு எந்த தேதியில் பணம் பெற்றார் எவ்வளவு பணம் பெற்றார் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் கோவிந்தசாமிக்கு தான் தெரியும். மேற்படி கோவிந்தசாமியை விசாரணை செய்தால் தான் அது குறித்த விவரம் தெரியவரும் என்றால் சரிதான். வாசா ஆ 4 மற்றும் 7 இரு ஆவணங்களிலும் பிரதிவாதி பணம் கொடுத்து கிரையம் பெற்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. வாசா ஆ 1லும் கிழக்கு பக்கம் சென்று வருவதற்கு வழி உரிமைதான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஜெயம்மாளின் வாரீசுகள் வெங்கடேசன், முனுசாமி, கோவன், விஜயா. வெங்கடேசன் தான் மூத்தவர். வெங்கடேசன் பெயரில் 2.5சென்ட்க்கான செட்டில் மென்ட் ஆன விவரம் உள்ளது என்றால் காவல் நிலையம் செல்லும் போது தெரியும். எப்போது காவல் நிலையம் சென்றேன் என்றால் 2015ல் சென்றேன் தேதி நியாபகம் இல்லை. என்ன கூறினார்கள் என்றால் பிரதிவாதிகள் தங்களுடைய சொத்து என்று

கூறினார்கள் என் ஆவணங்களை சரிபார்த்து எழுதிகொடுத்துவிட்டு செல்ல கூறினார்கள். கோவிந்தசாமி பெயரில் பட்டா எப்போது மாறியது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாசா ஆ 6 மற்றும் வாசா ஆ 8 அ அட்டவனை சொத்துக்கானது. பி அட்டவனை சொத்து தற்போது வரை காலியாக தான் உள்ளது. முதலில் மாட்டு கொட்டகை இருந்தது. மேற்படி விவரத்தை என் வழக்குரையில் கூறியுள்ளேன். அவ்வாறு வழக்குரையிலும் பிரமான வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். என் படி பி அட்டவனை சொத்து எவ்வளவு நீள அகலம் என்றால் தெரியாது. கோவிந்த சாமி பெயரில் பட்டா மாறும்போது ஜெயம்மாள் மற்றும் அவரது வாரீசுக்கு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. அசல் வழக்கு எண் 46/2015ல் வழியில் இடையூறு செய்யாமல் இருக்க தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டிற்கு செல்ல அது தான் வழி தடுப்பதால் தாக்கல் செய்தேன். வெங்கடேசன் பெயரில் உள்ள செட்டில் மென்ட் ஆவணத்தை ரத்து செய்ய இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. மீதம் உள்ள 2.5 சென்ட்டை நாங்கள் வாங்கியதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் 19 சென்ட் வாங்கியபோது தான் வாங்கினோம் தனிப்பட்ட முறையில் ஆவணம் இல்லை. என்படி 16.5 சென்ட் வாங்கும்போதே 2.5 சென்டை வாங்கினேன். 2.5 சென்ட் நிலத்தின் கிரையத்தை பதிவு செய்யவில்லை என்றால் பெரியப்பாவின் வாரீசுகள் வீடு பின்னர் இருப்பதால் அனைவரும் பொதுவாக உபயோக்கவேண்டி பதிவு செய்யவில்லை. ஜெயம்மாள் எந்த காலத்திலும் எங்களுக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் அனைவரும் ஒன்றாக இருப்பதால் பொதுவாக பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையுடன் சமா்ப்பித்த வரைபடத்தில் மேற்கு பக்கம் மன்னாரெட்டி நிலமும் கிழக்கு பக்கம் பி அட்டவனை இடமும், அதற்கும் கிழக்கே எங்கள் சொத்தும் உள்ளது. பி அட்டவனை சொத்து மற்றும் அ அட்டவனை சொத்திற்கு கிழக்கே எங்கள் சொத்து உள்ளது என்றால் சரிதான். என் படி பிரதிவாதிகள் எப்போதாவது வந்து இடையூறு செய்தார்களா என்றால் சரிதான். வழக்குரையில் தடுத்ததாக கூறியிருந்தால் அது பொய். பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன பதில் உரை தாக்கல் செய்தார் என்ற விவரமும் அசல் வழக்கு எண் 149/2015ல் வழக்குரையின் விவரமும் எனக்கு தெரியும்.

2.5 சென்ட் அவர்களுடையது என்று கூறுகிறார்கள். ஆனால் அது என்னுடையது.

**விசாரணை முடியும் நேரம்** **-12.**30pm